**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ம் நாள் வியாழக் கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசி மாதம் 10 ம் நாள்
**இ.ம.எண். 3/2024**
**இல்**
**அசல் வழக்கு எண். 40/2019**

1. தனஞ்செயம்
2. ரெங்கநாயகி
3. செந்தில்குமார் .......மனுதாரர்கள்/1,2,3 ம் எதிர்மனுதாரர்கள்

//எதிர்//

ரெங்கபாஷ்யம் ...........எதிர்மனுதாரர் /வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக 23.09.2024 இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. K. இளையராஜா அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

கடந்த 21.09.2023 அன்று மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுவின் சுருக்கம் :</u>**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். இந்த வழக்கு விபரங்கள் நன்கு தெரியும். கடந்த 04.04.2019 அன்று இவ்வழக்கில் எதிர் வழக்குரை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தன்னால் வழக்கறிஞரை சந்தித்து இந்நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. ஆகையால் மனுதாரர்கள் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலை பட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டியது அவசியமாக உள்ளது எனக்கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிருரையின் சுருக்கம்:</u>**

3. இந்த எதிர்உரையில் நேரடியாக ஒப்புக்கொண்ட செய்திகளை தவிர மற்ற செய்திகள் யாவும் மறுக்கப்படுகின்றன. இந்த எதிர்மனுதாரர் தன்னுடைய மனுதாரர்கள் பேரில் தடை உத்தரவு கேட்டு அதில் இடைக்கால பரிகாரம் கேட்டு எதிர்உரை தாக்கல் செய்ய 04.04.2019ம் தேதி போடப்பட்டிருந்த நிலையில் அன்றைய தினம் மனுதாரர்கள் ஆஜராகவில்லை. அன்றைய தினமே எக்ஸ்பார்ட்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் எக்ஸ்பார்ட்டி ஆர்டரை மாற்ற வேண்டுமென்று மனுதாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு சுமார் 4 வருடம் கழித்து 21.09.2023 ஆம் தேதி எக்ஸ்பார்ட்டி டிகிரி ஆன பிறகு கடந்த 4 ஆண்டு காலத்திற்கு மேலாக 04.04.2019 ஆம் தேதி ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி ஆர்டரை மாற்ற வேண்டுமென்று மனு தாக்கல் செய்துள்ளார். ஆனால் பரிகார காலத்தில் 21.09.2023 என கூறியுள்ளார். மற்றொரு மனுவில் 21.09.2023ம் தேதி எக்ஸ்பார்ட்டி டிகிரியை மாற்ற வேண்டுமென்று மனுவும் தாக்கல் செய்துள்ளார். தற்போது காலம் கடந்து எதிர்மனுதாரருக்கு தொல்லைக்கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் சுமார் 4 ஆண்டு கழித்து எக்ஸ்பார்ர்ட்டியை மாற்ற வேண்டுமென மனு கொடுத்திருப்பது சட்டப்படி சரியல்ல. அந்த மனுவை அனுமதித்தால்தான் 21.09.2023ம் தேதி ஏற்பட்ட டிகிரியை மாற்ற வேண்டும் என்று கொடுத்த மனுவை கோப்பில் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் மனுதாரர்கள் கொடுத்த மனுக்களை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

**தீர்வு**

5. மனுதாரர்கள் தரப்பில், கடந்த 04.04.2019 அன்று இவ்வழக்கில் எதிர் வழக்குரை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தன்னால் வழக்கறிஞரை சந்தித்து இந்நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. ஆகையால் மனுதாரர்கள் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலை பட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டியது அவசியமாக உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், கடந்த 04.04.2019 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்தவற்காக வாய்தா போடபட்டிருந்த நிலையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பின்னர் 21.09.2023 அன்று ஒருதலை பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றும், மனுதாரர் கடந்த 4 ஆண்டு காலத்திற்கு மேலாக ஒருதலைபட்ச உத்தரவை நீக்கறவு செய்வதற்கு மனுதாக்கல் செய்யாமல் தற்போது ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக்கோரி மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு எதிர்வழக்குரையை தாக்கல் செய்வதற்காக கடந்த 04.04.2019 அன்று வாய்தா போடபட்டிருந்ததாகவும், அன்று 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், அவரது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விபரங்களை கூற இயலவில்லை என்றும், அதனால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், அதனால் கடந்த 04.04.2019 அன்று ஒருதலைபட்ச உத்தரவு மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

8. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 04.04.2019 அன்று ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பின்னர் 21.09.2023 அன்று ஒருதலை பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 04.04.2019 முதல் 21.09.2023 வரை மனுதாரர்கள் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரர்கள் கூறியுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இருந்தபோதிலும் மனுதாரர்களுக்கு அவர்களது தரப்பு வழக்கை எடுத்துக்கூற வாய்ப்பு

அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருந்தபோதிலும் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட அலைச்சலையும், கால விரயத்தையும் கணக்கில் கொள்ளும்போது இந்த மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. **முடிவாக, மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.1,000/- செலுத்தவேண்டும் என்றும், மேற்படி தொகையை 17.10.2024 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு 26.09.2024 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
தரங்கம்பாடி.

**இணைப்பு : இல்லை**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
தரங்கம்பாடி.